# 9

# சிலுவையும் சபையும்

"கிறிஸ்து இல்லாத சிலுவை பாவிகளை மீட்பதற்கு பெலனற்றிருப்பதைப் போலவே சிலுவையில்லாத கிறிஸ்துவும் பெலனற்றவராகக் கூடும்" என்பதை கிறிஸ்து நமது பாவங்களுக்குக் கிரயம் செலுத்தினார் என்ற புதிய ஏற்பாட்டுக் கொள்கையை அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடும். இருப்பினும், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய கிறிஸ்து தமது ஜீவனை நமது பாவங்களுக்காக சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் (1 கொரி. 15:3) என்பதே சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்.

தேவனுடைய குமாரன் மனிதர்களுக்காக சிலுவையில் செய்த தியாகமே வேதாகம வரலாற்றின் மையக் கருவாக உள்ளது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன பக்கங்களிலும், வரலாற்று உண்மையைக் கூறும் புதிய ஏற்பாட்டின் பக்கங்களிலும் இயேசுவின் இரத்தம் சிந்தப்படுகிறது. நான்கு சுவிசேஷங்களிலும், ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கில் இயேசுவின் வாழ்க்கையில் கடைசி மூன்று நாட்களில் நடந்தவை காணப்படுவதாக ஹென்றி சி. தீயீஸ்ஸென் என்பவர் கணக்கிட்டுள்ளார். இயேசுவின் மரணத்தை விளக்கியுள்ளது போலவே, அவருடைய மூன்றரை ஆண்டு கால ஊழிய வாழ்க்கையை விளக்கிக் கூறியிருந்தால், சுவிசேஷப் புத்தகங்கள் மட்டும் 8,400 பக்கங்கள் உடையதாயிருந்திருக்கும்.[1] புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு 53 வசனங்களிலும் 1 வசனம் கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிக் குறிப்பதாக ஆர். ஏ. டோரி மதிப்பிட்டுள்ளார்.[2] பாவங்களுக்கான ஒரு தெய்வீகப் பலியையும், மரித்தோரிலிருந்து அந்தப் பலியானவர் உயிர்த்தெழுந்ததையும் கொண்டுள்ள ஒரே மார்க்கம் இந்த உலகத்தில் கிறிஸ்தவ மார்க்கம் மட்டுமே.

பாவமும், பாவிகளும், குற்றவுணர்வும், தேவனற்ற நிலையும், பிரிவும், துன்பமும், உள்ள இந்த உலகத்தில் சிலுவையே, இரட்சிப்புக்கான தேவ பெலனாக உள்ளது. உலகத்தின் அடிப்படைப் பிரச்சனைகள் எல்லாவற்றிற்கும் சிலுவை ஒரு தெய்வீகத் தீர்வாக உள்ளது. அவரே நமது பாவங்களுக்கான கிருபாதார பலியாவார்-அதாவது நாம் செய்த தவறுகளுக்கு அவர் கிரயம் செலுத்தி நமக்கு எல்லாவற்றையும் சரி செய்தவராக இருக்கிறார். "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1 கொரி. 1:18) என்று எழுதப்பட்டுள்ளது. "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவா. 2:2).

தேவனிடத்திலிருந்து பிரிதல் மற்றும் தேவனுடைய ஐக்கியத்தை விட்டு விலகுதல் போன்ற நமது ஆவிக்குரிய முரண்பாடான நிலையில் சமாதானத்திற்கும், ஒப்புரவாகுதலுக்குமுரிய தேவனுடைய கருவியாக சிலுவை உள்ளது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் ..." (கொலோ. 1:20) என்று பவுல் எழுதினார். எபேசியருக்கு எழுதின நிருபத்தில் 2:14-16ல் "எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து ... பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்று கூறுகிறது.

ஆவிக்குரிய பசியும், ஏழ்மையும் எங்கு தீவிரமாயுள்ளதோ அங்கு தேவன் முழு இரட்சிப்பை அளிக்கின்றார். நீதியின் ஐசுவரியங்கள் சிலுவையின் அடிவாரத்தில் இலவசமாய் வழங்கப்படுகின்றன. பவுல், "நாங்களோ, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், ..." (1 கொரி. 1:23) என்றார். மேலும் அவர், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து, "தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்" (1 கொரி. 1:31) என்றும் கூறினார்.

வேதத்தின் மையச் செய்தியாக, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே மையப் பொருளாக பரிசுத்த ஆவியானவர் வெளிச்சம் போட்டுக் காட்டுவது கேள்விக்கப்பாற்பட்டதாயுள்ளது.

*ஏனென்றால், சிலுவையானது இரட்சிப்பின் எல்லா சத்தியங் களோடும் கலந்துள்ளது. எனவே ஊற்றிலிருந்து ஒரு நீரோடை கிளம்பிச் செல்வது போல், சூரியனிலிருந்து சுகமளிக்கும் கதிர்கள் கிளம்பிச் செல்வது போல் சபையானது சிலுவையிலிருந்து புறப்பட்டு வரக் கூடியதாயுள்ளதென்று ஒருவர் எதிர்பார்க்கலாம். புதிய ஏற் பாட்டைக் கவனித்துப் படித்தால் இது உண்மை என்பது உறுதியாகும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமோ, சபையில்லாத கிறிஸ்தவமோ இருக்க முடியாது: உடலில்லாத தலையோ, தலையில்லாத உடலோ உயிர் வாழ முடியாது என்பதை தர்க்கரீதியான சிந்தனை நமக்குக் கூறுகிறது. சிலுவையும், சபையும் ஒன்றாக இணைந்துள்ளன, ஒரு திட்டத்தில் இணைந்துள்ளன; இழந்து போன மனித குலத்திற்கு தேவனுடைய கிருபையின் ஈவாக இது உள்ளது என்ற செய்தியே புதிய ஏற்பாட்டின் முக்கியமான அம்சமாகும். உலகத்தில் உள்ள எல்லா நாடுகளில் இருந்தும், தேவன் சிலுவையின் மூலமாக ஒரு புதிய குடும்பமாவதற்கு- கிறிஸ்துவில் ஒரே உடலாவதற்கு - அவருடைய தெரிந்து கொண்ட ஜனங்களாயிருப்பதற்கு அழைப்பு விடுக்கிறார்.*

*இந்தச் சிந்தனையை இன்னும் ஆழமாய் சீர்தூக்கிப் பார்ப்போம். சபை எவ்விதம் சிலுவையுடன் இணைக்கப்படுகிறது? சிலுவையும் சபையும் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவு என்ன? சிலுவை யானது சபைக்கு என்ன செய்கிறது?*

## அதினால் உண்டாக்கப்பட்டது

*முதலாவது, சிலுவை சபையை உண்டாக்குகிறது. பாவிகளின் இரட்சிப்பு மூலமாகவே சபை வெளித்தோன்றுகிறது. சிலுவை யில்லையேல், சபை இருக்க முடியாது.*

*கிறிஸ்துவைத் தனது இரட்சகராகவும், தேவனுடைய குமாரனா கவும், ஒருவர் விசுவாசித்துக் கீழ்ப்படிகிறபோது, கிறிஸ்துவின் இரத்தத்தில் அவர் பாவங்களறக் கழுவப்படுகிறார் (அப். 22:16). இந்தக் கழுவுதலின் மூலம் அவர் இரட்சிக்கப்பட்ட கூட்டமாகிய, “சபை” என்று புதிய ஏற்பாடு அழைக்கின்ற இரட்சிக்கப்பட்ட சமுதாயத்தில் சேர்க்கப்படுகிறார். இந்தக் காரணத்தினாலேயே, இயேசு தமது இரத்தத்தை விலையாக கொடுத்து சபையை வாங்கினார் என்று பவுல் பேச முடிந்தது. எபேசுவின் மூப்பர்களுக்கு அவர், “உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்*

*கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 20:28)* என்று கூறினார். சபைக்காகவே இயேசு, சிலுவையில் மரித்தார் என்பது தெளிவு. பவுல், *"... அப்படியே, கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:25, 27)* என்று சொன்னார். இயேசுவின் மரணத்தின் முக்கிய நோக்கமாவது: "வெளியே - அழைக்கப்பட்ட" ஜனக் கூட்டத்திற்கு இவ்வுலகத்திலேயே கிறிஸ்துவுடனான ஐக்கிய வாழ்வைக் கொடுப்பதற்கும், அவர்கள் தங்களையே அவருடைய ஆவிக்குரிய ஊழியத்திற்கு அர்ப்பணிப்பதற்குமேயாகும். பவுல், தீத்துவுக்கு, *"அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்திகரிக்கும் படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்." (தீத்து 2:14)* என்று கூறினார்.

தெற்கு அர்க்கான்சாஸ் பகுதியில் ஒரு இரவில் சுவிசேஷக் கூட்டம் ஒன்றில் நான் செய்தியளித்து முடித்தபோது, வித்தியாசப்பட்ட, மனதைத்தொடும் ஒரு கதையுடன் ஒரு பெண்மணி என்னிடம் வந்தார். டெக்ஸாஸில் உள்ள டல்லாஸ் என்ற இடத்தில் அவர்கள் நான்கு வயதான சிறுபிள்ளையாயிருந்தபோது நேர்ந்த விஷயத்தை அவர் என்னிடம் சொன்னார். அச்சமயம், அவர்கள் குடும்பம் போக்கு வரத்து நிறைந்திருந்த ஒரு சாலையினருகே வாழ்ந்தது. அவர்கள் வீட்டில் இருந்த திறந்த வெளியானது குழந்தைகள் வெளியே விளையாட ஒரு சிறு இடமளித்தது. ஒருநாள் மாலை, அப்பெண்ணும், அருகிலிருந்த அநேக குழந்தைகளும் திறந்த வெளியில் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தப் பந்து குதித்து வெளியேறி சாலையில் சென்று விழுந்து விட்டதாக அப்பெண் கூறினார். சிறிதும் சிந்தியாமல், அப்பெண் அதைத் தொடர்ந்து ஓடியிருக்கிறாள். அதை அடைந்த போது, குனிந்து பந்தை எடுத்து நிமிர்ந்து பார்க்கிறாள் ... ஒரு பெரிய வாகனமானது அந்தச் சாலையில் வேகமாக வருவதைப் பார்த்துப் பயத்தில் உறைந்து போகிறாள். அச்சமயத்தில் அவளுடைய ஒன்பது வயதான அண்ணன் அவளைப் பார்த்துவிட்டு, சாலையில் ஓடி வருகிறான். அவனும் அந்த வாகனத்தைப் பார்த்து விட்டான். மின்னல் போல் அவன், அவள் பிறகே ஓடி, அவளைப் பத்திரமாய்க் கொண்டு வர நம்பிக்கையாயிருந்தான். அந்த வாகனத்தின் முன்பாக அவன் ஓடி,

*அவளை சாலையிலிருந்து புறம்பே தள்ளி விட்டான், தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்து அவளை மரணத்திலிருந்து காத்தான். அந்தச் சுருக்கமான நேரம், அவனுடைய தங்கையைப் பாதுகாக்கப் போதுமானதாயிருந்தது. ஆனால் அவன் தன்னுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. அவ்வாகனமானது அவன்மேல் ஏறி நசுக்கி உடனே அவனைக் கொன்று விட்டது.*

*அந்தத் துன்பகரமான சம்பவத்தின் எல்லா விஷயங்களையும் தன்னால் நினைவு கூர முடியவில்லை என்றும், ஆனால், தன்னுடைய சகோதரனின் உயிரற்ற உடல் தெருவிலிருந்து எப்படி தூக்கப்பட்டு, அவர்கள் வீட்டின் முற்றத்தில் ஒரு மருத்துவ வண்டி வரும் வரையில் கிடத்தப்பட்டிருந்தது என்பதைத் தன்னால் மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வர முடிவதாக அந்தப் பெண் கூறினார். "எனது சகோதரன் எனக்காக மரித்தான்" என்று ஆழமான பொருளுடன், விசேஷித்த நன்றியுள்ள வார்த்தைகளை அப்பெண் கூறினார். அப்பெண்மணி ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவளாக ஆகி இருக்கிறார். ஆனால் சபையில் அவரது வாழ்வு, மற்றும் இன்றைய நாட்களில் அவரது ஊழியம் ஆகியவை, அநேக வருடங்களுக்கு முன் அவருடைய சகோதரனின் தியாகத்தின் மூலம் உண்டாக்கப்பட்டதாயிருக்கிறது.*

*இது போன்ற, இன்னும் சற்று ஆழமான விதத்திலே இயேசுவின் தியாகத்தினால் சபை உயிர் பெற்றுள்ளது. அவருடைய மரணமானது, நமக்கு ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை மட்டுமின்றி, தொடர்ந்து அதில் நிலைத்திருக்க ஆதாரமாகவும் உள்ளது. அவருடைய மரணமானது நமது கிருபாதார பலியானது, நமது கடந்த காலப் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கும் வழியானது. இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். தேவ மனிதராக நம்மிடையே நடந்தார். அவருடைய மரணத்தினால் நம்மை "அவருக்குச் சொந்தமான ஜனமாக" (1 பேது. 2:9) வாங்கினார். செங்கல் மற்றும் சிமெண்ட் கலவையால் சபை உண்டாக்கப்படவில்லை: அது இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்ட ஜனங்களால் ஆனது.*

*கிறிஸ்துவின் தியாகத்திற்கு நாம் மூன்று வழிகளில் பதிலளிக்கிறோம். முதலாவது, கிறிஸ்து நமக்காக செய்த கிரியையைப் பாராட்டுவதற்காக சிலுவையை அணைத்துக் கொள்கிறோம். இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் கிருபையின்மேல் நன்றியுள்ளவர்களாய், மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர்! கிறிஸ்து பரலோக ஐசுவரியம் நிறைந்தவராயிருந்தார்; இருப்பினும் நமக்காக அவர்*

ஏழையாகி, பரலோகத்தை விட்டு, மனிதனாக வந்தார். அவரது தரித்திரத்தின்மூலம் நாம் ஆவிக்குரிய ஐசுவரியவான்களாகும்படி அவர் அப்படியானார் (2 கொரி. 8:9). இரண்டாவது, அவருடைய மரணத்தின் பலன்களை ஏற்கின்ற பதில்செயலை நாம் செய்ய வேண்டும். உண்மையான பாராட்டுதல் என்பது சரியான முறையில் ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வழி நடத்துகிறது. கிறிஸ்துவின்மேல் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இவைகளினால், அவருடைய மரணத்தின் பலன்களை நமது வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளுகிறோம் (ரோமர் 6:1-4). அவர் எல்லாருக்காகவும் மரித்தார் (எபி. 2:9), ஆனால் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே, அவருடைய மரணத்தின் பலன்களைப் பெறுகின்றனர் (எபி. 5:8, 9). மூன்றாவது, அவருடைய தியாகத்திற்கு நாம், நமது அளவில்லாத ஊழியத்தினால் பதில் அளிக்க வேண்டும் (1 கொரி. 15:58). நமது நாவிலிருந்து, பாதம் வரை நாம் கிறிஸ்துவினுடையவர்கள்- சரீரம், ஆத்துமா மற்றும் ஆவி (1 கொரி. 6:19, 20) அனைத்தும் அவருடையது. எனவே இவ்வுலகத்தில் இப்பொழுது அவர் வடிவமைத்து, இயக்கி, மகிழும் வகையில் நமது ஊழியத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்.

## அதினால் சுத்திகரிக்கப்படுகின்றது

இரண்டாவது, சிலுவையானது சபையைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறதாயிருக்கிறது. தேவனுடைய ஜனங்களிடத்திற்கு, அவர்கள் மூலமாகவே அதனுடைய சுத்திகரிக்கும் வல்லமை தினமும் பாய்ந்தோடுகிறது. நமது உடலில் இரத்தம் தொடர்ந்து ஓடி, நம்மைத் தாங்கி, சுத்தப்படுத்துவது போலவே, இயேசுவின் விலை மதிப்பற்ற இரத்தம் அவருடைய ஜனங்களுக்குள்ளாக ஜீவனை நிலைநிறுத்தி பெலப்படுத்தும்படியாக பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது.

இரட்சிக்கப்பட்டால் மட்டும் போதாது. மாறாக இரட்சிக்கப்பட்ட நிலையைப் பாதுகாத்துக் கொண்டிருக்க வேண்டும். பாவியான ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய இரத்தத்தில் கழுவப்பட்டு, தேவ கிருபையினால் கிறிஸ்துவுக்குள்ளாகும் ஒவ்வொரு சமயமும், சபை உண்டாக்கப்படுகிறது. கிறிஸ்தவர் தினமும் வெளிச்சத்தில் நடக்கின்ற போது, தொடர்ந்து அந்த இரத்தத்தினாலே கழுவப்படுகிறார். யோவான், “அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்

பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'' (1 யோவா. 1:7) என்று எழுதினார். யோவான் இங்கு பயன்படுத்தும் "சுத்திகரிக்கும்" என்ற நிகழ்கால செய்வினைச் சொல்லானது கிரேக்க மொழியில் நிலையாக, தொடர்ந்து, நிகழ்காலத்தில் நடக்கின்ற செயலைக் குறிப்பதாகும்.

பாவம் செய்வதைக் குறைக்கத் தேடி, ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குள் வளருவதை நாடினாலும், ஒரு கிறிஸ்தவர் பூரணமான மனிதரல்ல. அவர் பிழையற்றவரென்பதல்ல. ஆனால், அவர் குற்றமற்றவராயிருக்க வேண்டும். பாவியினுடைய வாழ்க்கையில் உள்ள பாவம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் அவர் இரட்சிப்படைய வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் உள்ள பாவம், அவர் அல்லது அவள் கிறிஸ்துவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து இருக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. இந்த உலகத்தில் பாவ மன்னிப்பிற்கான நமது தேவையை எப்பொழுதுமே நாம் முற்றிலும் ஒழித்து விட இயலாது.

நமது குழந்தைகள் சிறுவர்களாக இருக்கும்போது, அவர்கள் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதைக் கவனித்தல் நன்றாக இருக்கும். இந்தப் புதிய திறமையை பெறுவதில் அவர்கள் இரண்டு அடிப்படைப் பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர்: சைக்கிளை நேராகப் பிடித்து மற்றும் தொடர்ந்து அதை நேராக வைத்துக் கொள்வது. சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதில் உள்ளதைப் போன்றே இரட்சிப்பும் இரண்டு படிகளையுடையதாக நோக்கப்படலாம்: பாவியான ஒருவர் முதலாவது, தேவனுடன் நேராக வேண்டும்; பிறகு அவர் தேவனுடன் நேராக தொடர்ந்து இருக்க வேண்டும். நேராகுதல் என்பது அவசிய மானதே என்றாலும் அது வெறும் தொடக்கம்தான். தொடர்ந்து அவர் கழுவப்படவில்லையென்றால், முதலாவது அவரைத் தீர்ப்பிட்ட அவருடைய வாழ்வின் பாவக் கறைகள் கிறிஸ்தவரான பின்பும் அவரைத் தீர்ப்பிடக் கூடிய பிரச்சனை உண்டு (அப். 8:22). கிறிஸ்தவரா வதற்கு முன்பு ஒருவர் தமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டிய தேவை இருந்ததென்றால், கிறிஸ்தவரான பின்பு ஏதேனும் பாவம் செய்தால், அதை நரகம் தனக்கேற்றதாய் ஆக்காமல் இருக்க, அப்பாவத்திலிருந்தும் அவர் இரட்சிக்கப்பட வேண்டியது அவசியமல்லவா?

*கிறிஸ்தவர் "ஒளியில் நடக்கின்ற வரையிலும்" இரட்சிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார். அப்போஸ்தலராகிய யோவான் எழுதியபடி, ஒளியில் நடப்பது என்பது ஆவிக்குரிய இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளதாகும்: இரட்சிப்புக்கு இயேசுவில் நம்பிக்கை கொள்வதுடன் அது தொடங்குகின்றது: "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவா. 2:2). நாமே நமது இரட்சிப்பை சம்பாதித்துக் கொள்ள முடியாது என்பது தெளிவு (எபே. 2:8, 9). விசுவாசத்துடன் கூடிய கீழ்ப்படிதலினால் நாம் இயேசுவுக்கு பதில்செயல் செய்தால் அவர் நம்மை இரட்சிப்பதாகக் கூறுகின்றார். அவர் கூறியதை அவர் செய்வார் என்று அவரை நாம் நம்ப வேண்டும். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கின்றோம் (2 கொரி. 5:6).*

*ஒளியில் நடப்பது என்பதற்கு அவருடைய சித்தத்தை நேர்மையுடன் செய்வதும் தேவைப்படுகின்றது. யோவான், "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தின் அன்பு கூருவதாம் ..." (1 யோவா. 5:3) என்று எழுதினார்; "அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்" (1 யோவா. 2:4, 5அ). நமது பாவம் நிறைந்த நிலையை ஒப்புக் கொள்வது என்பதே ஒளியில் நடப்பதின் அர்த்தமாகும் (1 யோவா. 1:8, 10), நமது பாவங்களை தேவனிடத்தில் ஒப்புக் கொள்ள வேண்டும் (1 யோவா. 1:9), மற்றும் நமது திறமைக்கு ஒத்திசைவுள்ள வகையில் நமது பாவங்களை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் (1 யோவா. 2:29). அவர் நடந்தது போலவே நாமும் நடப்பது (1 யோவா. 2:6) மற்றும் தேவனிடத்திலிருந்து வந்த ஏவப்பட்ட வெளிப்பாடுகளான வேதவசனங்களைப் பின்பற்றுவது என்பதே இதன் அர்த்தமாகும் (2 தீமோ. 3:16).*

## அதினால் வற்புறுத்தப்படுகிறது

*மூன்றாவதாக, சிலுவையானது சபையை வற்புறுத்துகின்றது மற்றும் அதை செயல்படும்படி தூண்டுகின்றது. சபையாரின் இருதயங்களில் கிறிஸ்து விரும்புகிறபடி இருக்கும் எண்ணத்தையும்,*

*கிறிஸ்து செய்யும்படி கூறுகின்ற ஊழியத்தைச் செய்யும் எண்ணத்தையும் ஆவிக்குரிய உற்சாகத்தையும் அது விதைக்கின்றது.*

*தொடர்ந்து சுத்தப்படுத்தப்படுதலும், சொந்த வல்லமையும் கிறிஸ்தவர்களுக்குத் தேவை. கிறிஸ்தவமானது அநேக மாண்புமிக்க உத்வேகங்களைத் தருகின்றது; தேவனுடைய கிருபையானது மிக உயர்ந்ததாகவும், நிலையானதாகவும் இருக்கின்றது. சிலுவையானது கிறிஸ்தவர்களின் வாழ்வைக் கட்டுப்படுத்துகின்றது. இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவா. 12:32) என்று கூறினார். பவுல், "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரி. 5:14, 15) என்று எழுதினார்.*

*கிறிஸ்தவர்கள் தேவன் மேலும், ஒருவர் மற்றொருவர் மீதும் மாபெரும் அன்பு கொள்ளும்படி சிலுவை அவர்களை நிரப்புகின்றது. யோவான், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவா. 4:19) என்று எழுதினார். அவரது மக்கள் மேல் அவர் செலுத்தும் அன்பை அன்றாடம் தியானிக்கும் கிறிஸ்தவர்கள் அவரில் இன்னும் ஆழமாய் அன்பு கொள்ளும்படி ஈர்க்கப்படுகின்றார்கள். மேலும் யோவான், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவா. 3:16) என்றும் எழுதினார். இயேசுவின் வாழ்வு பற்றிய எந்த ஒரு மறு கண்ணோட்டமும், அவருடைய அன்பின் ஆழம் மற்றும் உறுதித்தன்மை ஆகியவை பற்றிய புதிய மற்றும் ஊக்கமான சித்தரிப்புகளை உண்டாக்குகின்றது. இந்த சித்தரிப்புகளைப் பற்றி எண்ணும் கிறிஸ்தவர்கள், இயேசுவின் மேலும், ஒருவரொருவர் மேலும் அந்த அன்பைப் பெறுகின்றனர். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து, மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18).*

*பாவத்தின்மேல் ஒரு ஆழ்ந்த வெறுப்பையும், புறக்கணிப்பையும்*

சிலுவையானது கிறிஸ்தவர்களிடத்தில் பதியச் செய்கின்றது. துன்மார்க்கம் மற்றும் பாவத்தினால் ஏற்படும் பேரழிவு ஆகியவற்றிற்கு கல்வாரிச் சிலுவையும், நித்திய அழிவின் அடிகாணாப் படுகுழியும் இரண்டு வல்லமையுள்ள சாட்சியங்களாக இருக்கின்றன. சிலுவையின் காரணத்தையும், நரகத்தின் அவசியத்தையும் புரிந்து கொண்டவர் எவரும் பாவம் செய்வது தகுதியானது என்று வாதம் செய்ய முடியாது. தேவனுடைய பிள்ளையாயிருக்கிறவர் எவரும், எருசலேமுக்குப் புறம்பே ஒரு சிலுவையில் தேவனுடைய குமாரன் பெற்ற பாடுள்ள மரணத்தினாலே தனது மீட்பு விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதை மறக்க முடியாது. தமது குமாரனைப் பலியாக ஒப்புக் கொடுத்ததின் மூலமாக மட்டுமே எல்லாம் வல்ல தேவன் பாவத்தை ஈடுசெய்ய (கிரயம் செலுத்த) முடிந்தது. இந்த மதிப்பு மிக்க நிகழ்ச்சியானது உணர்வுள்ள ஒவ்வொருவரையும் பாவத்தை அருவருத்துப் புறக்கணிக்கச் செய்ய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்களை முழுமையாக கிறிஸ்துவின் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி சிலுவையானது அவர்களை பலவந்தம் பண்ணுகிறது. இது கிறிஸ்தவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்யவும், பிறஜனங்களுக்கு உதவி செய்யவும், ஒரு காரணத்தையும், பெலத்தையும் அவர்களுக்குத் தருகிறது. பவுல், ‘‘கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கின்றேன் (ரோமர் 1:14) என்று எழுதினார். மேலும் அவர், “ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது” (1 கொரி. 15:10) என்று கூறினார். சிலுவையில் தேவன் தனக்குச் செய்ததை நேர்மையாகப் புரிந்து, பாராட்டாதவரையில் கிறிஸ்தவர் எவரும் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய முழுவதும் உந்தப்படுவது இயலாது.

கிறிஸ்துவின் சபையானது தனது கர்த்தரின் கட்டளைகளைக் கருத்தாய்க் கைக்கொள்கிறது. அவருடைய விருப்பத்தையே செய்து, அவருடைய திட்டத்தையே நிறைவேற்றுகிறது. ஆனாலும் அவருடைய கிருபையினால் ஏற்படும் உள்ளான உற்சாகம் மற்றும் தொடர்ந்து அவர் காண்பிக்கும் பெலத்த அன்பு இவைகளினால், இந்த கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை ஒரு சுமையாகத் தெரிவதில்லை, “நாம்

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'' (1 யோவா. 5:3).

கிறிஸ்து உங்களுக்கு செய்துள்ளதை மனதில் வையுங்கள், அவர் உங்களுக்காகச் செய்த தியாகத்தை தினந்தோறும் நினைத்துப் பாருங்கள். அவருடைய இரட்சிப்பின் ஈவை நீங்கள் ஜாக்கிரதையாய் நினைக்கும்போது, அது நாளுக்கு நாள் உங்களை அவருடைய சாயாலாக்கி, அவரது கிருபையின் இராஜ்யத்திற்குள் உங்களை ஊழியம் செய்யும்படித் தூண்டக் கூடும்.

## முடிவுரை

தேவனுடைய அமைப்பினால் சிலுவையும் சபையும் ஒன்றாகக் கட்டியணைக்கப்பட்டுள்ளன. சபையானது சிலுவையினால் உண்டாக் கப்பட்டு, கழுவப்பட்டு, வற்புறுத்தப்படுகின்றது.

இயேசு சிலுவையிலே பாடுகள்பட்ட வேளையில், அந்தச் சிலுவையின் கீழ் நின்றிருந்த நியாமற்ற கூட்டத்திடமிருந்து வந்த இரண்டு ஏளனமான கேள்விகள் அவரைச் சுற்றிச் சுழன்றன: “இவன் ஏன் தன்னை இரட்சித் துக் கொள்ள முடியவில்லை?” மற்றும், “தேவன் ஏன் இவனை இரட்சிக்கவில்லை?'' (மத். 27:39-43ஐக் காணவும்). தேவனுடைய ஊழியத்தின் அஸ்திபாரத்தையே தாங்கள் தாக்குவதை அந்தக் கூட்டத்தார் சற்றும் உணரவில்லை. இயேசு தம்மையே இரட்சித்துக் கொண்டிருந்தாலோ அல்லது சிலுவை மரணத்திலிருந்து தேவன் அவரை விடுவித்திருந்தாலோ சபை பிழைத்திருப்பது என்பது முடியாததாகியிருக்கும்; ஏனென்றால் கடந்தகாலப் பாவங்கள் சிலுவையினாலே மன்னிக்கப்பட்டு, அன்றாடம் சிலுவையினாலே சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகின்ற மக்களாலேயே சபை ஏற்பட்டிருக்கின்றது. மேலும், சிலுவையில்லையென்றால், சபை தனது அன்றாட வாழ்விற்கான உந்து சக்தியைப் பெற்றிருக்க முடியாது, ஏனென்றால் தேவனுடைய மக்களாயிருந்து, தேவனுடைய ஊழியத்தைத் தேவனுடைய வழியிலேயே செய்கின்ற சபையானது சிலுவையினால்தான் வற்புறுத்தப்படுகின்றது.

நீங்கள் கிறிஸ்துவின் சபைக்குப் புறம்பே இருந்தால், அதற்குள் பிரவேசிக்க விரையுங்கள், ஏனென்றால் சபைக்குள் பிரவேசிக் கும்போது நீங்கள் சிலுவையின் எல்லாப் பயன்களையும் பெறுகின்

*றீர்கள். சபை என்பது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக வாழும் மக்களடங்கிய சரீரமே தவிர வேறல்ல.*

*தேவனுடைய தாராளமான வரங்களால் சூழப்பட்டவராகவே இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு நபரும் இருக்கின்றார். அவர் நமக்கு சுவாசிக்கக் காற்றையும், குடிக்கத் தண்ணீரையும், வாழ்வதற்கு பூமியையும், மகிழ்ச்சியடைய குடும்ப உறவுகளையும் மற்றும் எண்ணற்ற நலன்களையும் கொடுத்துள்ளார். தேவனுடைய இந்த அன்பு முழுவதையும் எண்ணிப் பார்க்காத ஒருவர் நஷ்டமடைவார். கிறிஸ்துவின் மூலமாக அவர் நமக்குக் கொடுத்துள்ள இரட்சிப்புத்தான் அவரது கிருபையின் மேன்மையான வெளிப்பாடாக இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அது தேவன் செலுத்திய மிகப்பெரிய விலைக் கிரயமாகும். அதைப் பெறும் பாவிகள் அதன் உயர்ந்த பலன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.*

*அநேகர் தங்களின் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களில் தேவனுடைய கிருபையுள்ள கரத்தைப் பார்த்திருக்கின்றார்கள், ஆனால் அவரது இரட்சிப்பை அவர்கள் பெற்றிருப்பதில்லை. உங்களைப் பொறுத்தமட்டில் இது உண்மையா? கிறிஸ்துவின்மேல் விசுவாசத்தினாலும் (ரோமர் 10:10), பாவத்திலிருந்து மனந்திரும்புவதாலும் (அப். 11:18), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதாலும் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுவதாலும் (கலா. 3:27) நீங்கள் கிருபையின் இடமாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் (1 கொரி. 12:13) பிரவேசித்து, அவருடைய நித்திய ஜீவனைப் பெறலாம். பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3) என்று கூறினார்; "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் ... எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்" (எபே. 1:7, 8அ).*

*இயேசு, தமது சபையாகிய சரீரத்தில் உண்டாக்கியுள்ள பாவமன்னிப்பு மற்றும் ஜீவனுக்கென்று சிலுவையின் மூலமாக உங்களை அழைக்கின்றார். அவரது அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?*

## பாட வினாக்கள்

*(விடைகள் 311 ம் பக்கங்களில்)*

1. *வேதாகம வரலாற்றின் இருதயம் போன்ற மையப்பகுதி எது?*
2. *மற்ற மார்க்கங்கள் பெற்றிராத ஆனால் கிறிஸ்தவம் தனது மையப்பகுதியாகப் பெற்றுள்ள விஷயம் எது?*
3. *சபையில்லாத கிறிஸ்தவம் இருக்க முடியாது என்பது ஏன் என்பதை விளக்குக.*
4. *சிலுவையானது சபைக்குச் செய்துள்ள மூன்று செயல்கள் என்னென்ன?*
5. *அநேகர் தங்களின் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களில் தேவனுடைய கிருபையுள்ள கரத்தைப் பார்த்திருக்கின்றனர், ஆனால் அவரது இரட்சிப்பை அவர்கள் பெற்றிருப்பதில்லை. நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுள் எப்படிப் பிரவேசிக்க முடியும்?*
6. *எந்த இரண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக இயேசு தமது சிலுவையின் மூலம் உங்களை அழைக்கின்றார்?*
7. *மன்னிப்பையும் ஜீவனையும் பெறும்படியாக வந்த மக்களால் இயேசுவின் சரீரம் உண்டாக்கப்பட்டது. அந்த சரீரம் என்னவென்று அழைக்கப்படுகின்றது?*

## வார்த்தை உதவிகள்

***சபையின் தலை*** - இயேசு கிறிஸ்து (எபே. 1:22, 23).

**கிரயத்துக்குக் கொள்ளப்படுதல்** - வாங்கப்படுதல். கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக் கிறார்கள்" என்று நாம் கூறும் பொழுது, அது நமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரணமடைந்ததைக் குறிப்பிடுகின்றது.

**ஒப்புரவாகுதல்** - மறுபடியும் ஒன்றாகக் கூட்டுதல்; உடைந்த உறவுகளைச் சரி செய்தல், இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்படுகின்றோம்.

***பரிசுத்தப்படுத்துதல்*** - தேவனுடைய விசேஷ நோக்கத்திற்காகப் "பிரித்தெடுத்து வைக்கப்படுதல்"

***மறுரூபமடைதல்*** - மாற்றப்படுதல். இயேசுவின் உருவுக்கொப்பான புதிய பண்பைப் பெறுவதற்கு கிறிஸ்தவர்கள் மாற்றப்பட வேண்டியதாக உள்ளது. ரோமர் 12:2ல் "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு

ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” என்று கூறப்படுகின்றது.

[1]Henry C. Thiessen, *Lectures in Systematic Theology* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1949), 313. [2]R.A. Torrey, *What the Bible Teaches* (New York: Fleming H. Revell Co., 1898), 144.